செ.வெ.எண்:07/2016 நாள்:06.09.2016

# பத்திரிகை செய்தி

சிவகங்கை மாவட்டத்தில், 01.01.2017-ஐ தகுதி நாளாக கொண்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் நடைபெறுவதையொட்டி, 01.09.2016 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைவு வாக்காளர் பட்டியலை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் வெளியிட்டு; கிராம சபையில் வாசித்து காட்டிடும் பொருட்டு, சிறப்பு கிராம சபை கூட்டம், 10.09.2016 மற்றும் 24.09.2016 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. எனவே, இந்த சிறப்பு கிராம சபை கூட்டங்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.